Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 125

சனிக்கிழமை
30 மார்ச் 2024

பங்குனி 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

**முச்சந்தி முரளி**



"சாமி வரம் குடுத்தாலும் பூசாரி இடங்குடுக்காதமாதிரி நீதிமன்றம் ஓர்டர் போட்டாலும் உவங்கள் விடமாட்டங்கள் போல"

# நாடாளுமன்றைக் கலைக்க மொட்டுக்கட்சி புதுவியூகம்!

## ஏப்ரலில் ரணிலுக்கு 'செக்'!



கொழும்பு, மார்ச் 30

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தலை நடத்துவதற்காக, நாடாளுமன்றத்தைக் கலைக்கும் நடவடிக்கைகளை பெரமுனவினர் மேற்கொள்ளவுள்ளனர் என்று உள்ளகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. ☞ 11

# எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மையில்லை

## ருவான் விஜேவர்த்தன தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 30

ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடத்தப்படுவதே பொருத்தமானதாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்றுமுன்தினம் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை எதிர்வரும் ☞ 11

# அரசாங்கம்தான் விஸா வழங்கும்!

## தனியாருக்கு இடமில்லை என அழுத்தம் திருத்தமாக அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 30

விஸா வழங்கும் நடவடிக்கைகள் எக்காரணம் கொண்டும் தனியாரிடம் கையளிக்கப்படமாட்டாது என குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விஸா வழங்கும் நடவடிக்கைகள் தனியாரிடம் வழங்கப்படவுள்ளன எனச் செய்திகள் வெளியாகியிருந்த ☞ 11

# வீதிப் பாதுகாப்புக்கு விசேட செயற்றிட்டம்

## பிரதிப்பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 30

வடமாகாணத்தில் போக்குவரத்துக் கட்டுப்பாட்டையும் வீதிப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் வகையில் விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த பொலிஸார் திட்டமிட்டுள்ளனர் என்று வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் சி.ஏ.தனபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணத்தில் அதிக வாகன விபத்துகள் மற்றும் அதிக வாகன நெரிசல் உள்ள பகுதிகள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளன. அடுத்த சில வாரங்களில் அந்தப் பகுதிகளில் வாகனங்களை நிறுத்துவதை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல், வீதிகளில் புதிய அடையாளப் ☞ 11

# ஞானசாரதேரருக்கு திடீர் சுகவீனமாம்!

## சிறை மருத்துவமனையில் சிகிச்சை



கொழும்பு, மார்ச் 30

முஸ்லிம் மதத்துக்கு எதிரான அவதூறுக்காக, 4 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட கலகொட அத்தே ஞானசாரதேரர் சுகவீனம் காரணமாக சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என ராவணா பலய அமைப்பின் செயலாளர் நாயகம் இத்தே கந்தே சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

ஞானசாரதேரருக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டு ☞ 11

# இணையத்தில் பரிசு; மக்கள் அவதானம்!

விரிவு:- பக்.05

# வற்றியது பணவீக்கம்!

கொழும்பு, மார்ச் 30

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மதிப்பீட்டின் பிரகாரம், கடந்த பெப்ரவரி மாதம் 5.9 சதவீதமாகப் பதிவாகியிருந்த பணவீக்கம், மார்ச் மாதம் 0.9 சதவீதமாக சடுதியாக வீழ்ச்சியடைந்தது.

அதன்படி, கடந்த பெப்ரவரி மாதத்தில் 7.0 சதவீதமாகப் பதிவான உணவல்லாப் பணவீக்கம் மார்ச்சில் 0.5 சதவீதம் எனும் குறிப்பிடத்தக்க அளவிலான சுருக்கத்தைப் பதிவு செய்ததுடன், பெப்ரவரியில் 3.5 சதவீதமாகப் பதிவான ☞ 11

# குடும்பத்தலைவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 30

இளவாலை - வசந்தபுரம் பகுதியில் தனியாக வசித்துவந்த நபரொருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புதிய கொலனி, கீரிமலைப் பகுதியைச் சேர்ந்த ஐயங்கன் சிவானந்தராஜா (வயது-47) என்பவரே இவ்வாறு சடலமாக ☞ 11

## முருகன், ரொபேட் பயஸ், ஜெயக்குமார்

# இலங்கைக்குத் திரும்புவதில் தொடர்ந்தும் முட்டுக்கட்டை

சென்னை, மார்ச் 30

முருகன், ரொபேட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய மூவரும் இலங்கை திரும்புவதற்கான ஆவணங்கள் கிடைக்கப்பெற்றபோதிலும் நாடு திரும்புவதில் தொடர்ந்து இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மூவரும் இலங்கை திரும்புவதற்கான தற்காலிக கடவுச்சீட்டு இலங்கைத் துணைத்தூதரகத்தால் வழங்கப்பட்டதை அடுத்து அதற்கான அனுமதியை வழங்குமாறு தமிழ்நாடு அரசின் சார்பில் இந்திய ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டிருந்தது. இதையடுத்து மூவரும் இலங்கை திரும்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் ஒரு கிழமைக்குள் அவர்கள் நாடு திரும்பும் நிலை ஏற்படும் என்றும் தகவல் வெளியாகியிருந்தது. இந்த நிலையிலேயே, உரிய அனுமதி கிடைத்தும் ☞ 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.3,439 மில்லியன் இளநீரால் வருவாய்

கொழும்பு, மார்ச் 30

இலங்கையிலிருந்து இளநீர் ஏற்றுமதி மூலம், கடந்த பெப்ரவரி மாதத்தில் சுமார் 3ஆயிரத்து 439 மில்லியன் ரூபா மொத்த வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது என தென்னை அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இளநீர் ஏற்றுமதிமூலம், கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் 2 ஆயிரத்து 705 மில்லியன் ரூபாவாகும்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் 734 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது என்றும் தென்னை அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் ரொஷான் பெரேரா தெரிவித்தார். (ச-இ)

# ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவதற்கு அரசு தீர்மானம்



## கூறுகிறார் அமைச்சர் மனுஷ

**கொழும்பு, மார்ச் 30**

**ஜனாதிபதி தேர்தலையே முதலில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார அறிவித்துள்ளார்.**

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியம் உள்ளதா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

அதற்கான சாத்தியம் இல்லை. ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும். ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரே பொதுத்தேர்தல். இதுபற்றிக் கலந்துரையாடக்கூட இல்லை. ஏனெனில் முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தலைநடத்துமாறுமொட்டுக் கட்சி ஆரம்பத்தில் யோசனை முன்வைத்திருந்தது. எனினும், கலந்துரையாடலின் பின்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இணக்கம் எட்டப்பட்டுள்ளது. ஆகவே இது குறித்து சந்தேகம் வேண்டாம். நான் அமைச்சரவையில் இருக்கின்றேன். ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகுமாறு எங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது - என்றார். (ஒ-44)



# நாமலை விட பஸிலே சிறப்பு

## பிரசன்ன வெளிப்படை

கொழும்பு, மார்ச் 30

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளராக பஸில் ராஜபக்ச இருப்பதையே விரும்புவதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மொட்டுக் கட்சி அலுவலகத்தில் ஊடகவியலாளர்கள் கேள்விக்குப் பதிலளிக்கும்போது மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளும் பதில்களும் வருமாறு;-

**கேள்வி**: நாமல் ராஜபக்ச தேசிய அமைப்பாளராக இருப்பார். பழையவர்களை, கட்சியைவிட்டு வெளியேறியவர்களை மீண்டும் வருமாறு அழைக்கிறார். வேலை செய்ய முடியுமா?

***பதில் :-*** அவர் பதவியை ஏற்று அவரது எண்ணப்படி செயற்படுவது அவரது பொறுப்பு. அது சரியா தவறா என்று சொல்ல எனக்கு உரிமை இல்லை. கட்சிக்கு நல்லது நடந்தால் அதை மட்டுமே விரும்புகிறோம்.

**கேள்வி:** தேசிய அமைப்பாளர் பதவி மாற்றம் குறித்து உங்கள் கருத்து என்ன?

***பதில்:-*** பஸில் ராஜபக்ச இருப்பதுதான் எனக்கு தனிப்பட்ட முறையில் பிடிக்கும். 2015ஆம் ஆண்டு மிகவும் கடினமான நேரத்தில் பொறுப்பை ஏற்றவர். நாங்கள் அவருடன் பணியாற்ற பழகி புரிந்துணர்வுடன் இருக்கிறோம். புதிய நபர் வரும்போது அவருடன் இணைந்து பணியாற்ற பழகிக்கொள்ள வேண்டும். அந்தச் சவாலை பஸில் எடுத்தால் நன்றாக இருக்கும் என்ற நிலைப்பாட்டில் இருக்கிறேன்-என்றார். (ஒ-44)

# தோட்டத் தொழிலாளர்கள் பாதுகாப்புச்சட்டம் விரைவில்

கொழும்பு, மார்ச் 30

தோட்டத் தொழிலாளர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாக்க புதிய தொழில் பாதுகாப்புச்சட்டம் விரைவில் கொண்டுவரப்படும் என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்குத் தேவையான தலையீட்டை ஜனாதிபதி செய்துள்ளார். அதற்கான நடவடிக்கைகளை துரிதகதியில் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்துடன் தோட்டத் தொழிலாளர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாக்க விசேட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ச-இ)

## சபாநாயகருக்கு எதிரான பிரேரணை

# விவாதத்துக்கான செலவை எதிரணியிடம் கேட்போம்

கொழும்பு, மார்ச் 30

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான மூன்றுநாள் விவாதத்துக்கு செலவிடப்பட்ட பணத்தை வழங்குமாறு எதிர்க்கட்சியினரிடம் கோரப்போவதாக ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சமர சம்பத் தஸாநாயக்க தெரிவித்துள்ளார். சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்துக்கு 45 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இந்தப்பணத்தை மீளச் செலுத்துமாறு கோரும் பிரேரணையொன்றை நாடாளுமன்றில் கொண்டு வரப்போவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-6)

# சுதந்திரக் கட்சியை சந்திரிகா பலப்படுத்துவார்

கொழும்பு, மார்ச் 30

சுதந்திரக்கட்சியைப் பலப்படுத்துவதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நடவடிக்கை எடுப்பாரென்ற நம்பிக்கையுள்ளது என்று அக்கட்சியின் மூத்த உப தலைவரும், அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

'சந்திரிகா அம்மையாரின் கட்சி உறுப்புரிமை தடை செய்யப்பட்டிருந்தது. தற்போது அது மீள வழங்கப்பட்டுள்ளது. அவருடன் பேச்சு நடத்தப்படுகின்றது. எனினும், அவர் இன்னும் கட்சியுடன் இணையவில்லை. அதற்கான அழைப்பை விடுத்துள்ளோம். தனது பெற்றோர் கட்டிகாத்த கட்சியை சந்திரிகா அம்மையார் பலப்படுத்துவார் என்ற நம்பிக்கையுள்ளது. அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் சார்பில் வேட்பாளர் ஒருவர் களமிறங்கமாட்டார் என்றே கருதுகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-44)

# சுகாதார சேவைகள் பணிமனையை கிளினிக்கை நடத்த வழங்குங்கள்

## போதனா மருத்துவமனை கோரிக்கை

யாழப்பாணம் போதனா மருத்துவமனையில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கிளினிக்கை வினைத்திறனாக நடத்திச் செல்வதற்கு வசதியாக யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனை அமைந்துள்ள இடத்தை 10 வருட குத்தகை அடிப்படையில் வழங்குமாறு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தரப்பால் முன்வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் கடந்த ஆண்டு மாத்திரம் 6 இலட்சத்து 32 ஆயிரம் பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என்பதையும் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி சுட்டிக்காட்டினார். (ஒ-26)

# 2023 இல் போதைப்பொருளுடன் கைதானோர் விவரம் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழப்பாண மாவட்டத்தில் உயிர்கொல்லி போதைப் பொருள் பாவனை தொடர்பில் கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான விவரங்கள் பொலிஸாரால் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

கஞ்சாவுடன் யாழ். பொலிஸ் பிராந்தியத்தில் 317 பேரும், காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் 166பேருமாக 483 பேர் கைதாகியுள்ளனர்.

ஹெரோய்னுடன் யாழ். பொலிஸ் பிராந்தியத்தில் 657பேரும், காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் 159பேருமாக 816 பேர் கைதாகியுள்ளனர்.

ஐஸுடன் யாழ். பொலிஸ் பிராந்தியத்தில் 67பேரும், காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் 3பேருமாக 70 பேர் கைதாகியுள்ளனர்.

சட்டவிரோத மதுபானத்துடன் யாழ். பொலிஸ் பிராந்தியத்தில் 790 பேரும், காங்கேசன்துறை பிராந்தியத்தில் 506 பேருமாக ஆயிரத்து 296 பேர் கைதாகியுள்ளனர்.

கோடாவுடன் யாழ். பொலிஸ் பிராந்தியத்தில் 69 பேரும், காங்கேசன்துறை பிராந்தியத்தில் 55 பேருமாக 124 பேர் கைதாகியுள்ளனர்.

அரச மதுபானத்துடன் யாழ். பொலிஸ் பிராந்தியத்தில் 89 பேரும் காங்கேசன்துறை பிராந்தியத்தில் 32 பேருமாக 121 பேர் கைதாகியுள்ளனர்.

ஏனையவற்றுடன் யாழ். பொலிஸ் பிராந்தியத்தில் 183 பேரும், காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் 74 பேருமாக 257 பேர் கைதாகியுள்ளனர். (ஒ-26)

# இரவுநேரத்தில் இயங்கும் உணவகங்கள் சோதனை

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இரவுவேளைகளில் திறந்திருக்கும் உணவு கையாளும் நிலையங்களில் திடீர் பரிசோதனைகளை நேற்றுமுன்தினம்இரவு மேற்கொண்டனர். மிருசுவில், கொடிகாமம், சாவகச்சேரிநகரம், கைதடி, நாவற்குழி பிரதேசங்களில் அமைந்துள்ள உணவகங்கள் மற்றும் வெதுப்பகங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையின்போது மக்கள் நலன்களுக்கு ஒவ்வாத நிலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பெருமளவு உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. (ஒ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செயற்பாட்டாளர்களுடன் அவுஸ். தூதுவர் சந்திப்பு

மன்னார், மார்ச் 30

**இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் சில்வெஸ்டர் வோர்திங்டன் வடக்குப் பயணத்தின் ஒருபகுதியாக மன்னாருக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்து, மனித உரிமை செயற்பாட்டாளர்களுடன் சந்திப்பை நடத்தியுள்ளார்.**

மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

அத்துடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் அவர்களது உறவினர்கள் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட தரப்புகளையும் அவர் சந்தித்தார். (ஒ-56)



## பெண்களின் உழவியந்திர பயணத்துடன் கிளி.யில் மகளிர் தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

பெண்களின் உழவுஇயந்திர பயணத்துடன் மகளிர் தின நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சியில் கொண்டாடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகமும், மாவட்ட மகளிர் விவகாரக் குழுக்களின் சம்மேளனமும் இணைந்து இந்த மகளிர் தின நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

நிகழ்வில் ஓய்வுபெற்ற முன்னாள் மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன், யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கோசலை மதன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். இதன்போது உழவு இயந்திர சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளவுள்ள 8 பெண்களுக்கான கௌரவிப்பு மற்றும் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. (ச-113)

## முல்லைத்தீவில் வீதி புனரமைக்கப்படும்

*பிள்ளையான் உறுதியளிப்பு*

முல்லைத்தீவு, மார்ச் 30

இரட்டைவாய்க்கால் மாத்தளன் வரையான வீதியை புனரமைத்து வழங்குவதாக இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) உறுதியளித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நேற்றுமுன்தினம் பயணம் மேற்கொண்ட இராஜாங்க அமைச்சர்களான சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் காதர் மஸ்தான் ஆகியோர் அம்பலவன் பொக்கணை கிராமத்தில் சந்திப்பு நடத்தினர்.

கிராமிய வீதிகள் அபிவிருத்தியின் கீழ் இரட்டைவாய்க்கால் தொடக்கம் மாத்தளன் வரையான வீதியை புனரமைத்துத் தருவதாக இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் மக்கள் மத்தியில் தெரிவித்துள்ளார். (ஒ-19)

## பதவியை ஏற்பதற்கு மறுத்தாராம் பஸில்

கொழும்பு, மார்ச் 30

பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை ஏற்குமாறு அக்கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கையை பஸில் ராஜபக்ச ஏற்க மறுத்துள்ளார். இதனையடுத்தே கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (ஒ-44)

## ஞானப்பழம் ரூ. 2 இலட்சம்

கிளிநொச்சி, மார்ச் 30

முரசுமோட்டை இரண்டாம்கட்டை ஊற்று விநாயகர் ஆலயத் திருவிழாவின்போது பிள்ளையாரின் ஞானப்பழம் மாங்கனி ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டபோது, அடியவர் ஒருவர் அதனை 2 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாவுக்கு வாங்கியுள்ளார். (ஒ-113)

## நிதி திரும்புவதற்கு முன்னர் வீதியைப் புனரமையுங்கள்

நாகர்கோவிலையும் எழுதுமட்டுவாழையும் இணைக்கும் வீதிக்கு ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்லும் அபாயம் உள்ளதால் அந்த நிதியைப் பயன்படுத்துவதற்கு ஆவன செய்யுமாறு, நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய நிர்வாகத்தால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கடந்த வியாழக்கிழமை மனு கையளிக்கப்பட்டுள்ளது.

நாகர்கோவிலையும் எழுதுமட்டுவாழையும் இணைக்கும் வீதியானது 1950 ஆம் ஆண்டளவில் மீன்பிடித் திணைக்களத்தின் ஊடாக அமைக்கப்பட்டதாகவும் அந்தவீதி பல வருடங்களாகச் சீர்செய்யப்படாமல் காணப்படுவதால் அதனைச் சீர்செய்வதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் மேற்படி வீதிக்கு குறுக்காக நீரேரி காணப்படுவதால் பாலம் அமைத்து வீதி அமைக்க வேண்டிய சூழ்நிலை காணப்பட்டது.

மேற்படிபகுதிவனவளஉயிரிகள்திணைக்களத்தின் ஆளுகைக்குள் இருப்பதால் பாலம் அமைக்க முடியாத நிலை காணப்பட்டு, நிதி திரும்பிச் செல்லும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த நிதியை திரும்பிச் செல்லவிடாது தடுத்து இந்த வீதி அமைப்பதற்கு ஒழுங்கு செய்யுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மனு கையளிக்கப்பட்டுள்ளது. (ஒ-100)

## புதினம் தெரியுமோ?

**தோ**ல் இருக்கச் சுளை விழுங்கிறவை இப்ப எல்லா இடத்திலையும் அள்ளுகொள்ளையா இருக்கினம். அதுவும் படிப்புச்சம்பந்தப்பட்ட இடங்களிலதான் வெள்ளையும் சொள்ளையுமா வெளிக்கிட்டுக் கொண்டு, உள்ளால உக்கல் வேலையள் செய்யினம். யாழ்ப்பாணத்தில உள்ள ஒரு பெரிய கல்வி நிறுவனத்தில எல்லாரின்ர கண்ணுக்கு முன்னாலையும் தைரியமா இப்பிடி ஓட்டுமாட்டுகளைச் செய்யினமாம். அந்தக் கல்வி நிறுவனத்தில படிச்சு முடிச்ச உடன எல்லாருக்கும் பள்ளிக்கூடங்களில ரீச்சர் வேலை எண்டதால, எல்லாப் பிள்ளையளும் அங்க நிண்டுதான் படிக்கோனும். அங்க படிக்கப் போறவை மாணவர்களிட்ட சில பொருள்களைக் கொண்டரச் சொல்லி எழுத்துமூலமாக் கேட்டு வாங்கிறவை. அப்படி மாணவர்கள் கொண்டு வாற பொருள்களையெல்லாம் 'பால் குடிச்ச பிள்ளையார் மாதிரி' இருக்கிற ஒரு அதிகாரி தான் வாங்கி தன்ர பொறுப்பில வைச்சிருக்கிறவராம். ஆனால் அந்தப் பொருள்கள் எங்க இருக்கு, எப்பிடி இருக்கு எண்டதெல்லாம் அவருக்கு மட்டும் தான் வெளிச்சமாம்.

இப்பிடி அவர் அங்க உள்ள பொருள்களையெல்லாம் ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கேக்க, இந்த மாதம் 11ஆம் திகதி அந்தக் கல்வி நிறுவனத்துக்கு, இருப்பெடுக்க ஒரு குழு போயிருக்குது. வழக்கமா ஒவ்வொரு வருசமும் இப்பிடி எல்லா அரசாங்க நிறுவனங்களிலையும் இருப்பெடுக்கிற மாதிரி அங்கையும் போய், லிஸ்டில இருக்கிற சாமான்களை காட்டச் சொல்லிக் கேட்டிருக்கினம். ஏற்கனவே இந்த இருப்பெடுக்கிற ஆக்கள் எப்ப வரப்போயினம் எண்டு அறிவிச்சுப் போட்டுத்தான் போறவை. அப்பிடி முன்னறிவித்தல் குடுத்தும் கூட, மண்வெட்டியள் கொஞ்சத்தைக் காணேலை. உடனேயே எங்கட 'பால் குடிச்ச பிள்ளையார்' தன்ர மோட்டர் சைக்கிளில, ஒரு சிற்றூழியரையும் கூட்டிக்கொண்டு வெளியால பறந்து போய், பறந்து வந்தார். வந்தவர் அப்பிடியே ஒரு உரப்பையை கொண்டந்து, இருப்பெடுக்கிறவையிட்ட காட்டினார். இவ்வளவு நேரமும் எத்தனை மண்வெட்டியைக் காணேலை எண்டு தேடிச்சினமோ, அத்தினை மண்வெட்டியளும் அதுக்குள்ள இருந்திருக்கு. அதால எல்லாம் சரியா இருக்குது எண்டு இருப்பெடுக்கிறவை தாங்கள் கொண்டந்த பேப்பரில பதிஞ்சிட்டுப் போட்டினம்.

அவை வெளிக்கிட்டுப் போன அடுத்த செக்கனே அதே சிற்றூழியரை ஏத்திக்கொண்டு, அதே உரப்பையையும் காவிக்கொண்டு, 'பால்குடிச்ச பிள்ளையார்' மோட்டார் சைக்கிளில வெளிக்கிட்டுட்டார். அண்டைக்குப் போன மண்வெட்டியள் அதுக்குப் பிறகு இண்டைக்கு வரைக்கும் அந்தக் கல்வி நிறுவனப் பக்கம் வரவேயில்லையாம். இப்பிடித்தான் எல்லாச் சாமானும் மாயமாப் போகுதாம். இருப்பெடுக்கிறவையும் சொல்லிப்போட்டு வாறதால, இஞ்சையிருக்கிற சுளைவிழுங்கியள் என்னென்ன சாமான்களை ஆட்டையைப் போட்டிச்சினமோ அதுகளையெல்லாம் ஒருக்கா கொண்டந்து அவையின்ர கண்ணில காட்டிப் போட்டு, பிறகு அதை வெளியால கொண்டு போறதே தொடர்கதையா இருக்குதாம். இப்ப உதுகளைப் பற்றி மேலிடங்களுக்கு கடிதங்களும் போயிருக்கு. பாப்பம் அந்தக் கடிதங்களுக்குப் பிறகாவது ஒழுங்கா நடக்குதோ எண்டு.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்சவம்

கீரிமலை, மார்ச் 30

ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாள் ஆலய மாராசூர சம்ஹார உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கும், திருக்குளிர்ச்சி உற்சவம் நாளை மறுநாள் திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளன.

இரண்டு தினமும் அடியார்கள் பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டு அம்பாளின் இஷ்டசித்திகளைப்பெற்றுய்யுமாறு ஆலய ஆதீனகர்த்தா நவராஜ உமாபதீஸ்வரக்குருக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ப-6)

## பரிசளிப்பு

கொடிகாமம், மார்ச்30

கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் 105 ஆவது நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் பாடசாலை வளாகத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம் பெறவுள்ளன.

அதிபர் நா.கண்ணதாசன் தலைமையில்நடைபெறவுள்ள நிகழ்வில்பிரதமவிருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் கலந்துகொள்ளவுள்ளார்.

(ஒ-159)

## வருடாந்த பொதுக்கூட்டம்

சாவகச்சேரி, மார்ச் 30

சாவகச்சேரிதெற்கு, மதுவன் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம், நிலைய மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது. (ப-9)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

சங்கானை அருள்மிகு ஸ்ரீ பேச்சியம்பாள் தேவஸ்தான மகா சங்காபிஷேக விஞ்ஞாபனம் இன்று சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு கிரியைகளுடன் ஆரம்பமாகி எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து, சிறப்பு ஹோம வழிபாடுகள் திரவிய அபிஷேகம் என்பன காலை 7 மணிக்கு இடம்பெற்று, மாலை 5 மணிக்கு பால் குடப்பவனி, விசேட பூஜை, வசந்த மண்டபப் பூஜை, திருவூஞ்சல் மற்றும் பூந்தண்டிகையில் அம்பாள் வீதி உலா வரும் காட்சி இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ப-63)

## இல்ல மெய்வன்மை

யாழ்ப்பாணம், மார்ச் 30

சோமாஸ்கந்த கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டி, கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் சி.திரிகரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்வி அலுவலக உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.சாரங்கன், சிறப்பு விருந்தினராக தற்போது லண்டனில் வசிக்கும் பாடசாலையின் பழைய மாணவரும் பொறியியலாளருமான தி.நகுலேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக அச்சுவேலி பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி எச்.யு.பிரியந்த மற்றும் பளை மத்திய கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் த.திவாகர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)

## சாவை வென்று வாழ்வு தந்தவர் இயேசு

ஒரு மனிதனின் பாவத்தால் மனிதன் சிதறினான். நாடுகள் சிதறின. பல மொழிகள் உண்டாயின. பல கலாசாரம் உதயமானது. பல அரசுகள் ஏற்பட்டன. ஒருமை, ஒற்றுமை அழிந்து தனிமையில் வெந்தான். பயமும் பகையும் பெருகியது. பழியும் பாவமும் பலுகியது. ஒரேஒரு மனிதன் வழியாய்ப் பாவம் இந்த உலகத்தில் நுழைந்தது. அந்தப் பாவத்தின் வழியாய்ச் சாவு வந்தது. அது போலவே, எல்லா மனிதரும் பாவம் செய்ததால், எல்லா மனிதரையும் சாவு கவ்விக்கொண்டது. அந்த சாவிலிருந்து மக்களை மீட்கவே இயேசு வந்தார். வாழ்வுக்கான பாதைகளைத் தந்தார். பல மக்கள் அவரை நம்பினர், வாழ்வு பெற்றனர். மக்கள் இயேசுவிடம் நம்பிக்கை கொண்டதற்குப் பல காரணங்கள் இருந்தன. சிலர் இயேசு புரிந்த அதிசய செயல்களைக் கண்டு வியந்தார்கள். கடவுளின் வல்லமையோடுதான் அவர் இச்செயல்களைச் செய்தார் என அவர்கள் ஏற்றனர். வேறு சிலர் இயேசு முன்னைய இறைவாக்கினர் போல போதித்துச் செயற்பட்டதைக் கண்டு அவரிடம் நம்பிக்கை கொண்டனர். இன்னும் சிலர் இயேசுவிடம் துலங்கிய இரக்க குணம், அனைவரையும் மன்னித்து ஏற்கும் தன்மை, ஏழைகளைச் சார்ந்து செயற்படல், நோயுற்றோருக்கு நலமளித்து அவர்களைச் சமுதாயத்தில் தலைநிமிர்ந்து நடக்கச் செய்தல் போன்ற செயற்பாடுகளைக் கண்டு, அவரிடம் நம்பிக்கை வைத்தனர். ஆனால், வேறுசிலரோ இயேசுவை ஏற்க மறுத்தனர். இவர்கள் பெரும்பாலும் அக்காலத்தில் அதிகாரத்தில் இருந்தவர்களே. சமய அதிகாரிகள் இயேசுவை யூத சமயத் துரோகியாகக் கண்டனர். அரசியல் அதிகாரிகள் அவர் ஆதிக்கத்துக்கு பங்கம் வருமோ என எண்ணி அஞ்சினர்.



தவக்கால சிந்தனை

ஆனால், சாமானிய மக்கள் இயேசுவை ஏற்கத் தயங்கவில்லை. அவர்களுடைய இருதயத்தில் நெகிழ்ச்சி இருந்தது. கடவுளின் வார்த்தையைக் கேட்கின்ற மனநிலை அவர்களிடத்தில் துலங்கியது. குறிப்பாக, ஏழைகளும் அக்காலத்தில் பாவிகளாகக் கருதப்பட்டவர்களும் இயேசு தங்களுக்கு நன்மை செய்யவே வந்துள்ளார் என்பதை எளிதில் கண்டுகொண்டனர். அவர்கள் இயேசுவைத் தேடிச் சென்றனர். அவருடைய சொல்லிலும் செயலிலும் கடவுளின் வல்லமையையும் அன்பையும் கண்டனர். ஒருசில நல்லவர்களின் இறப்புதான் பலருக்கு வாழ்வைக் கொடுக்கிறது. ஒருவருடைய தவறான வாழ்வு பலருக்கு அழிவைக் கொண்டு வருவதும் உண்மையே. நல்லவர் ஒருவருடைய வாழ்வு இன்று அரிதாகவுள்ளது. பொல்லாதவர் கூட்டம் பெரிதாகவுள்ளது. நல்லவர் ஒருவராக நாமிருப்போம். பலருக்கு வாழ்வு கொடுப்போம். இனிதே வாழ்வோம்.

**அருட்தந்தை றமேஸ் அ.ம.தி.**

## சிறுவர் சந்தை நிகழ்வு

கோண்டாவில், மார்ச் 30

கோண்டாவில் கிழக்கு, ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் மற்றும் குமரன் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் இயங்கும் குட்டிச்சுட்டி முன்பள்ளிச் சிறார்களின் சிறுவர் சந்தை நிகழ்வு, கோண்டாவில் சந்தியிலுள்ள கடைத்தொகுதியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. சனசமூக நிலையத் தலைவர் து.சுதன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில், குமரன் விளையாட்டுக் கழக கனடாக் கிளையின் முன்னாள் தலைவர் தி.வேலும்மயிலும் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ப-66)

## ஆலோசனைக் கூட்டம்

சாவகச்சேரி, மார்ச் 30

தென்மராட்சிப் பிரதேசத்தில் நாதஸ்வர வாசிப்பில் புகழ்பெற்று மறைந்த இசைமேதை கலாநிதி கே. எம்.பஞ்சாபிகேசனின் நூற்றாண்டு விழா நடத்தப்படவுள்ளது. இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. கூட்டத்தில் இசை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ப-9)

## இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்தநாள். சிலருக்கு பேச்சினால் வீண் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**இடபம்:** உற்சாகமான நாள். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். சற்று அலைச்சலும் சோர்வும் உண்டாகும். மகிழ்ச்சி உண்டாகும். எதிர்பார்த்த சுபசெய்தி கிடைக்கும். காரியத்தடைகள் விலகும்.





**மிதுனம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். செலவுகள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனை எதிர்பார்த்ததைவிடவும் குறைவாகத்தான் இருக்கும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். அதிகாரிகளின் சந்திப்பும், அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியை தொடங்குவது நல்லது. உடல் அசதி உண்டாகும். விற்பனை விறுவிறுப்பாக நடைபெறும்.





**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சியை தவிர்க்கவும். பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். நிதானம் அவசியம். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை அவசியம். சிறுசிறு வாக்குவாதம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அவ்வப்போது குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.





**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். துணிச்சலாக முடிவெடுக்கும் திறன் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.





**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். அந்நியோன்னியம் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. நண்பர்களைச் சந்தித்துப் பேசுவீர்கள். ஆதாயம்பெற வாய்ப்பு உள்ளது.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை முழு ஒத்துழைப்பு தருவார். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். செலவுகளால் கடன் வாங்க நேரிடும்.





**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். மகிழ்ச்சி ஏற்படும். விற்பனை அமோகமாக நடைபெறும்.

**மீனம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். சிலருக்கு திடீர்ப் பண வரவுக்கும் எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் இடையூறுகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இன்னும் வெளியே இருக்கிறார்கள் ஞானசாரதேரர்கள்


பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசாரதேரருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 4 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனையும், ஒரு இலட்சம் ரூபா அபராதமும் விதித்துள்ளது. மத நல்லிணக்கத்துக்கு குந்தகம் ஏற்படுத்தும் விதமாகச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இஸ்லாத்தை இழிவுபடுத்தும் விதமாக கருத்து வெளியிட்டமை மற்றும் மத உணர்வுகளைத் தூண்டியமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் சட்டமா அதிபரால் தொடுக்கப்பட்ட வழக்கிலேயே அவருக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்புக்கு எதிராக ஞானசாரதேரர் மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்யமுடியும். ஆனால், அதுவரையில் கொஞ்சக்காலமாவது அவர் இப்போது சிறைக்கூண்டுக்குள் தான் அடைபட்டிருக்கவேண்டும்.

2011ஆம் ஆண்டு போர் முடிந்து இரண்டு ஆண்டுகளில் அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தாபய ராஜபக்சவால் ஆரம்பித்து வைக்கப்பட்டதுதான் பொதுபலசேனா அமைப்பு. அதன் பொதுச் செயலராக அன்றிலிருந்து இருந்துவருபவர்தான் ஞானசாரதேரர். இந்த அமைப்பை கோத்தாபய ராஜபக்ச ஆரம்பித்து வைத்த காலத்திலிருந்து ஞானசாரதேரர், தமிழ் மக்களுக்கு எதிராகவும் முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் பல குரோதக் கருத்துகளை கக்கி வந்திருக்கின்றார். தன்னைத் தீவிர சிங்கள - பௌத்த தேசியவாதியாகக் காட்டிக் கொள்வதுடன், அந்தக் கருத்தை சிங்கள மக்களிடத்தே விதைக்கும் மிகப்பெரும் கைங்கரியத்தையும் செய்து வந்தவர் அவர். 2010ஆம் ஆண்டு கடத்தப்பட்ட கேலிச் சித்திர ஊடகவியலாளரான பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா எக்னலிகொடவை நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்து, 2016 இல் அச்சுறுத்திய குற்றச்சாட்டில் 2018ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் கைதாகி, 6 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார் ஞானசாரதேரர். 10 மாதங்கள் வரையிலேயே அவர் சிறைத்தண்டனையை அனுபவித்தார். அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் அவர் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டிருந்தார். அதன்பின்னர் கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும், 'ஒரு நாடு ஒரு சட்டம்' செயலணியின் தலைவராக அவர் நியமிக்கப்பட்டிருந்தார். இவ்வாறு ஆட்சியாளர்களின் ஆசீர்வாதத்துடனேயே பௌத்த - சிங்கள பேரினவாதத் திமிரில் ஏனைய சிறுபான்மைச் சமூகங்களை நோக்கி விஷத்தை கக்கிக்கொண்டிருந்தார். அப்படிப்பட்டவர் இப்போது கைதாகி சிறையில் அடைக்கப்பட்டிருந்தாலும் மீண்டும் வெளியில் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம். ஆட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஞானசாரருக்கு பொதுமன்னிப்பு வழங்கக்கூடும்.

ஞானசாரதேரர் என்பவர் ஒட்டுமொத்த சிங்கள- பௌத்த பேரினவாதத்தின் கருவி மாத்திரமே. இந்த ஞானசாரதேரரை சிறையிலடைப்பதால் மாத்திரம் பிரச்சினை தீர்ந்துவிடாது. ஞானசாரதேரரை விடவும் விஷம் கக்கும் அரசியல்வாதிகளும், பிக்குகளும் இன்னமும் வெளியேதான் இருக்கின்றார்கள்.

மட்டக்களப்பு அம்பிட்டிய சுமண ரத்ன தேரரும் இதேபோன்ற ஒருவரே. அதேபோன்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாஸ அமரசேகர, நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன் பிலபோன்றோர் இந்தப் பட்டியலில் முன்னிலையில் இருப்பவர்கள்.

**எதிர்காலத்தில் இத்தகைய ஞானசாரதேரர்கள் உருவாகாதவாறு, இந்த நாட்டின் கட்டமைப்பில் குறிப்பாக, பெரும்பான்மைச் சிங்களவர்களின் மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும். அது நடக்காத வரையில் இன்னும் பல ஞானசாரர்கள் உருவாகிக் கொண்டுதான் இருப்பார்கள்...!**






## மொட்டுக் கட்சியின் ஆயுள் எப்போதோ முடிந்துவிட்டது

**கொழும்பு, மார்ச் 30**

**மொட்டுக் கட்சி கருகிவிட்டது. நாமல் அல்ல எந்தக் கொம்பன் வந்தாலும் அக்கட்சியால் மீண்டெழமுடியாது என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளராக நாமல் ராஜபக்ச நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

'பஸில் அல்ல, நாமல் அல்ல எந்தக் கொம்பன் வந்தாலும் மொட்டுக் கட்சியைக் கட்டியெழுப்பமுடியாது. மொட்டுக் கட்சியின் கதை முடிந்துவிட்டது. அது மீண்டும் மலராது. ஏனெனில் மக்கள் ராஜபக்சக்களையும், மொட்டுக் கட்சியையும் நிராகரித்து விட்டனர். அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்படவேண்டும். பஸிலின் தேவைக்கேற்ப தேர்தல்களை நடத்தமுடியாது. ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்படும் என நாம் நம்புகின்றோம்.' என்றும் விஜித ஹேரத் கூறினார். (ஒ-44)

## ஐ.ம.ச. கூட்டணி 5ஆம் திகதி அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 30
ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான அரசியல் கூட்டணி எதிர்வரும் 5 ஆம் திகதி அதிகாரபூர்வமாக வெளியிடப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் நிறைவுபெற்றுள்ளன. அன்றைய தினம் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டணியில் இணையக்கூடும் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கூட்டணிக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவுள்ளது. (ஒ-44)

## இணையத்தில் பரிசு; மக்கள் அவதானம்!

யாழ்ப்பாணம், மார்ச் 30
பண்டிகைக் காலங்களில் பிரபல நிறுவனங்களின் வர்த்தக நாமங்களைப் பயன்படுத்தி, சமூக வலைத்தளங்கள் ஊடாக மோசடிகள் இடம்பெற்று வருகின்றன. இதுதொடர்பில் மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும் என்று கையடக்கத் தொலைபேசிகளுக்கு குறுஞ்செய்தி மூலம் அனுப்பி, அதனை 'க்ளிக்' செய்யும் போது தரவுகள் பெறப்படுகின்றன.

இந்த வருடம் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் மாத்திரம் 200க்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் சிரேஷ்ட தகவல் பாதுகாப்புப் பொறியியலாளர் சாருக தம்மபொல குறிப்பிட்டார். (ச-இ)

## சினோபெக் விரிவாக்கம்

கொழும்பு, மார்ச் 30
அம்பாந்தோட்டையில் புதிய சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்கவுள்ள சினோபெக் நிறுவனம், தனது விநியோகத்தை இரு மடங்காகவும் அதிகரிக்கவுள்ளது. எதிர்வரும் ஜூன் மாதம் இவை நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-6)

## துர்நடத்தை முறைப்பாடு; கையாள புதிய முறைமை

ஆபாசமான காணொலிகள் மற்றும் நிர்வாண புகைப்படங்களை இணையத்தளத்தில் பதிவேற்றுவது தொடர்பான முறைப்பாடுகளைக் கையாள புதிய முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் இணையத்தின் ஊடாக முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம். பெறப்படும் முறைப்பாடுகள் லண்டனிலுள்ள இணைய கண்காணிப்பு நிறுவனத் துக்குத் தெரிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். (ச-இ)

**நாளை**

31.03.2024
ஞாயிற்றுக்கிழமை
பங்குனி–18
சுபநேரம் :09.11 -10.41
ராகுகாலம் : 04.41 - 06.11

**நாளொரு நல்வார்த்தை**

விதியை நம்பிக்கொண்டிருப்பவன்,
எதையும் செய்யமாட்டான்.

–சாணக்கியர்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜூலியன் அசாஞ்சே நாடுகடத்த நிபந்தனை

லண்டன், மார்ச் 30

**விக்கிலீக்ஸின் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சேயை, அமெரிக்காவுக்கு நாடு கடத்த வேண்டுமாயின் 'அசாஞ்சேக்கு மரணதண்டனை விதிக்கப்படாது' என்ற உத்தரவாதத்தை அமெரிக்கா வழங்கவேண்டும் என்று பிரிட்டன் உயர் நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது.**

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த செய்தியாளர் ஜூலியன் அசாஞ்சே கடந்த 2006ஆம் ஆண்டில் விக்கிலீக்ஸ் என்ற இணையத் தளத்தைத் தொடங்கினார். கடந்த 2010 ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் போரில் அமெரிக்காவின் குற்றப் பின்புலத்தை வெளிப்படுத்தும் வகையிலான இரகசிய ஆவணங்கள் அவருடைய இணையத்தளத்தில் வெளியாகின.

இதையடுத்து, பாலியல் வன்கொடுமை வழக்கில் ஜூலியன் அசாஞ்சேயை கைது செய்ய கடந்த 2010ஆம் ஆண்டு நவம்பரில் சுவீடன் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. இந்தக் கைது அரசியல் பழிவாங்கல் என்று தெரிவித்த அசாஞ்சே, கைது நடவடிக்கையில் இருந்து தப்பிக்க 2012 ஆம் ஆண்டில் பிரிட்டன் தலைநகர் லண்டனிலுள்ள ஈகுவடோர் தூதரகத்தில் தஞ்சமடைந்தார்.

2019ஆம் ஆண்டு அசாஞ்சேக்கான ஆதரவை ஈகுவடோர் அரசாங்கம் திரும்பப் பெற்றதையடுத்து அவர் பிரிட்டன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். கடந்த 5 ஆண்டுகளாக அவர் தெற்கு லண்டனில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அமெரிக்காவை உளவு பார்த்தது, இராணுவ இரகசியங்களைத் திருடியது உட்பட 17 குற்றச்சாட்டுகளை அசாஞ்சே மீது அமெரிக்கா சுமத்தியுள்ளது. அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்று அவரை நாடு கடத்த பிரிட்டிஷ் உள்துறை அமைச்சகம் கடந்த 2022ஆம் ஆண்டு ஜூனில் ஒப்புதல் அளித்தது.

இது தொடர்பான வழக்கு விசாரணை கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இதன்போதே, 'ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவுக்கு நாடுகடத்தப்பட்டால் அவருக்கு மரணதண்டனை விதிக்கப்படக்கூடாது, அசாஞ்சேயின் கருத்துச் சுதந்திரத்துக்கும் உத்தரவாதம் அளிக்கவேண்டும், அமெரிக்கக் குடிமகனுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு உரிமைகளை அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த அசாஞ்சேவுக்கும் வழங்கவேண்டும் உள்ளிட்ட நிபந்தனை களுக்கு அமெரிக்கா இணங்கினாலேயே அசாஞ்சே நாடுகடத்தப்படுவது தொடர்பில் பரிசீலிக்கப்படும் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ம)



## பிரபஞ்ச அழகிப்போட்டி: சவூதிப் பெண் பங்கேற்பு

ரியாத், மார்ச் 30

வரலாற்றில் முதல்முறையாக, பிரபஞ்ச அழகிப்போட்டியில் சவூதி அரேபியா பங்கேற்கவுள்ளது.

பெண்களுக்கு எதிராக அடக்குமுறைகளும், அடிப்படைவாதமும் நிறைந்த நாடான சவூதி அரேபியாவிலிருந்து அழகிப்போட்டிக்கு, 'போட்டியின் நிபந்தனைகளுக்கு அமைய' பெண்ணொருவர் பங்கேற்கும் முதலாவது சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளது. 27 வயதான ரூமி அல்கஹ்தானி என்ற யுவதியே சவூதி அரேபியாவின் சார்பில் பிரபஞ்ச அழகிப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளார்.

இதை தனது சமூக வலைத்தளங்களில் ரூமி அல்கஹ்தானி உறுதிப்படுத்தியுள்ளார். (ம)

## உலக பணக்காரர்கள் பட்டியலில் ட்ரம்ப்

வொஷிங்டன், மார்ச் 30

உலக பணக்காரர்கள் பட்டியலில் முதன்முறையாக 500 இடங்களுக்குள் இடம்பிடித்துள்ளார் அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப். அவரது சொத்து மதிப்பு 6.5 பில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது.

இந்த நிலையில் அவரது சொத்து மதிப்பில் 4 பில்லியன் அமெரிக்க டொலர் உயர்ந்துள்ளதையடுத்து அவர் உலக பணக்காரர்கள் பட்டியலில் 500 ஆவது இடத்துக்கு வந்துள்ளார். (ச)

## போரை விரிவாக்குகின்றன 'எப்-16' போர் விமானங்கள்!

கீவ், மார்ச் 30

உக்ரைனுக்கு வழங்கப்படும், 'எப்-16' ரக போர் விமானங்கள் எந்தெந்த நாடுகளில் இருந்து இயக்கப்படுகின்றனவோ, அந்த நாடுகள் அனைத்தும் ரஷ்யாவால் இலக்காக்கப்படும் என்று புடின் எச்சரித்துள்ளார்.

2022ஆம் ஆண்டு பெப்ரவரியில் உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு மேற்குலக நாடுகளுடனான ரஷ்யாவின் உறவுகளில் ஆழமான நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இது 1962 ஆம் ஆண்டு கியூபா ஏவுகணை நெருக்கடிக்குப் பிறகு உருவான பெரும் நெருக்கடியாகும். இவ்வாறானதொரு பின்னணியில், 'எப்-16' ரக போர் விமானங்களை உக்ரைனுக்கு வழங்க மேற்கு நாடுகள் தற்போது முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இதையடுத்தே புடின் 'எப்-16' ரக போர் விமானங்கள் எந்தெந்த நாடுகளில் இருந்து இயக்கப்படுகின்றனவோ, அந்த நாடுகள் அனைத்தும் ரஷ்யாவால் இலக்காக்கப்படும் என்று எச்சரித்துள்ளார். இது முற்றிலும் முட்டாள்தனமானது என்றும் புடின் தெரிவித்துள்ளார். (ம)



## பா.ஜ.க. வேட்பாளராக கங்கனா

புதுடில்லி, மார்ச் 30

இந்த ஆண்டு நடைபெறவுள்ள இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. வேட்பாளராகக் களமிறங்குகிறார் நடிகை கங்கனா ரணாவத். மக்களவைத் தேர்தலுக்கான பா.ஜ.க.வின் 111 வேட்பாளர்கள் அடங்கிய 5 ஆம் கட்ட வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் இமாச்சலப் பிரதேச மாநிலத்தின் மண்டி தொகுதியில் நடிகை கங்கனா ரணாவத் பா.ஜ.க. சார்பில் போட்டியிடுகிறார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை நடிகை கங்கனா, அண்மைய காலமாக சர்ச்சைக்குரிய விமர்சனக் கருத்துகளை வெளியிட்டு அரசியல் வட்டாரத்தில் பேசுபொருளாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## அமெரிக்காவிடமிருந்து பிரிந்து தனித்துச் செயற்படத் தயார்!

*இஸ்ரேல் அதிரடி அறிவிப்பு; முற்றுகின்றது மோதல்*


டெல்அவிவ், மார்ச் 30

அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் முறுகல்கள் ஏற்பட்டுள்ள நிலையில், தேவை ஏற்பட்டால் தனித்துச் செயற்படவும் தயார் என்று இஸ்ரேலியப் பிரதமர் நெத்தன்யாகு அறிவித்துள்ளார்.

வடக்கு காஸா மற்றும் தெற்குக் காஸா பகுதிகளில் தனது இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட இஸ்ரேல், தற்போது ராபாவில் தரைவழியாகவும் வான் வழியாகவும் தாக்குதல்களை நடத்த ஆரம்பித்துள்ளது. வடக்கு காஸாவில் இருந்தும், தெற்குக் காஸாவிலிருந்தும் 23 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து ராபாவில் தஞ்சமடைந்துள்ள எனவே அங்கு இஸ்ரேல் மேற்கொள்ளும் தாக்குதல்கள் மனிதப் பேரவலத்துக்கு வழிவகுக்கும் என்று தெரிவித்த அமெரிக்கா, தரைவழி நடவடிக்கையைப் பிற்போடுமாறு கோரியது. ஆனால், அமெரிக்காவின் கோரிக்கைகளை இஸ்ரேல் கொஞ்சமும் கண்டுகொள்ளவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் ராபாவில் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி எதிர்க்காமல் விட்டது. இதனால் ஆத்திரமடைந்த நெத்தன்யாகு, அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொள்ளவிருந்த இஸ்ரேலிய உயர்மட்டக் குழுவைத் தடுத்து நிறுத்தினார். இந்தப் பரபரப்பு அடங்குவதற்குள், "அமெரிக்காவின் ஆதரவை இஸ்ரேல் வரவேற்கின்றது. ஆனால், தேவையேற்பட்டால் தனித்துச் செயற்படவும் தயார்" என்று நெத்தன்யாகு அறிவித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தவக்காலத்தின் பெரியவெள்ளி தினமான நேற்று, இயேசுக் கிறிஸ்துவின் இறப்பை அனுஷ்டிக்கும் விதமாக கத்தோலிக்க தேவாலயங்களில் இரவிரவாக வழிபாடுகள் இடம்பெற்றதுடன், பல இடங்களில் தாகசாந்தி நிலையங்களும் அமைக்கப்பட்டன. (ப-213)

## முன்னறிவித்தலின்றி மின் துண்டிப்பு

### மக்கள் விசனம்

வவுனியா மாவட்டத்தில் முன்னறிவித்தலின்றி மின் இணைப்பு துண்டிக்கப்படுவதால் அந்தப் பகுதி மக்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்.

தற்போது மின்பட்டியல் அனுப்பப்படாமல் தொலைபேசி இலக்கத்துக்கே மின் கட்டண அறிவித்தல் வழங்கப்பட்டு வருகின்றது. இதனால், மாதாந்தச் சம்பளம் பெறுபவர்கள் சம்பளம் கிடைத்த மறுநாள், மின் பட்டியலைச் செலுத்தக் காத்திருக்கும் நிலையில் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி மின் சாரசபையினர் மின்சாரத்தைத் துண்டித்துச் செல்வதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ப-110)

**மாபிள் வேலை, தறாசோ வேலை**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 100.00 ரூபாய்.
தராசோ வேலைகளும் செய்து தரப்படும்.
(CS/28109) J-1
077 334 1281

# ஆண்டு விழா

கொக்குவில், மார்ச் 30

பொற்பதி அறிவாலயத்தின் 12ஆவது ஆண்டு நிறைவு விழா மற்றும் சரஸ்வதி முன்பள்ளியின் 39ஆவது கால்கோள் விழா என்பன பொற்பதி அறிவாலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளன.

பொற்பதி அறிவாலயத்தின் தலைவர் சண்.வாமதேவன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாநிதி ஆறு.திருமுருகன், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் ஓய்வுநிலைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுமார், யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பெ.வசந்தன், கௌரவ விருந்தினர்களாக ஜேர்மனி சமூக சேவையாளர் அ.சிவகுருநாதர், சரஸ்வதி முன்பள்ளி ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி சரோஜா சிவராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில்
அந்தோனியார் கோவிலில் இருந்து 350m தூரத்தில்
3 பரப்புக் காணியுடனான வீடு விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
(தரகர் தொடர்பு கொள்ளவேண்டாம்)
(CS/54561) J-1
தொடர்பு:- 077 614 6434

**வீடு விற்பனைக்கு**

சுண்டிக்குளி, விதானையார் வீதியில் 3 1/2 பரப்புக் காணியில், சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
(CS/54560) J-1
077 614 6434

**5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம்
14.03.1936

மறைவு
25.03.2019

**அமரர் செல்லையா இராசலிங்கம்**

**திதி: அபரபக்ஷ பஞ்சமி**

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஆண்டுகள் ஐந்து சென்றாலும் கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்......

**ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!**

கல்வியங்காடு.
உங்கள் நினைவுகளோடு வாழும்..
குடும்பத்தினர் (cs.28356) (N-1)

# மரண அறிவித்தல்



மலர்வு
13.07.1963

உதிர்வு
26.03.2024

## திருமதி பாலரஞ்சன் ஜெயந்தினி

சங்கானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலரஞ்சன் ஜெயந்தினி அவர்கள் கடந்த 26.03.2024 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் சத்தியவதி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - இராசமணி தம்பதியரின் பாசமிகு மருமகளும், பாலரஞ்சனின் (லக்ஸ்மி ஸ்ரோர்ஸ் சங்கரத்தை) பாசமிகு மனைவியும், தபீஷன், தாரகி, தஷாகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாந்தினி (ஜேர்மனி), சாந்தகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுலோசனா (ஓய்வு பெற்ற அதிபர்), ஜீவலதா (கனடா) ஆகியோரின் மைத்துனியும், ஜெனார்த்தனனின் அன்பு சித்தியும், வைஷ்ணவியின் அன்பு மாமியாரும், யதுர்ஷன், கனிகாவின் அன்பு அத்தையும், ஜெய்சாந்தின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.03.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 550 2057
076 617 0279
077 900 7489

தகவல்:
குடும்பத்தினர்

(CR 42106) S-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
19 • 09 • 1963



மறைவு
25 • 03 • 2024

## செல்வநாயகம் ஜெயக்குமார்

நல்லூர் சட்டநாதர் வீதியை பிறப்பிடமாகவும், இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயக்குமார் செல்வநாயகம் அவர்கள் கடந்த (25.03.2024) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்பிள்ளை - செல்வநாயகம், அன்னபூரணம் - செல்வநாயகம் தம்பதிகளின் அன்பு மகனும் தேவகியின் அன்புக் கணவரும், நிலக்ஷனாவின் அன்புத் தந்தையும், சிறீந்திரன் செல்வநாயகம் (லண்டன்), ரங்கமலரின் அன்புத் தம்பியும், காலஞ்சென்ற செல்லச்சாமி மற்றும் புவனேஸ்வரி செல்லச்சாமி (கனடா) தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திரா சிறீந்திரன் (லண்டன்), சிவகுருநாதன். கேதீசன் (கனடா), ரமேசன் (கனடா), காலஞ்சென்றவர்களான கோணேசன் (அருணா), தணிகேசன் (பேபி அருணா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், றோகினி (கனடா), பகவதி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகலனும், Dr.சுகன் சிறீந்திரன் (லண்டன்), கஜன் சிறீந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், Dr.அபிராசுகன் (லண்டன்), அபிராம் (கனடா), அஸ்வின் (கனடா), அபிசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிறியன் சுகன் (லண்டன்), அஸ்ரியா சுகன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29.03.2024) மின்மயானம், உசிலம்பட்டி றோட், திருமங்களம் நகர், மதுரை மாவட்டம், இந்தியாவில் நடைபெற்றது.

மின்மயானம்
உசிலம் பட்டி றோட்
திருமங்களம் நகர்
மதுரை மாவட்டம்
இந்தியா.

**தகவல்: குடும்பத்தினர்.**

தேவகி (மனைவி) -077 652 2980
நிலக்ஷனா (மகள்) - 076 333 8781
சிறீந்திரன் (அண்ணா) - +44 740 407 7372
இந்திரா (மைத்துனி) - +44 740 540 4632
கேதா (மைத்துனன்) - 001 416 949 1968
ரமேஸ் (மைத்துனன்) - 001 519 731 5416

(CR 41985) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் இரண்டாம்நாள் பங்குனித் திங்கள் பூஜை வழிபாடுகள், பிரம்மஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன. (எ-159)

கிராமிய மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக, குளங்கள் மற்றும் கிராமங்களின் மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் நீர்ப்பாசன அமைச்சால் பயிர்ச்செய்கைக்கான தானியம் வழங்கும் வேலைத் திட்டம் நாடு பூராகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்குத் தானியங்கள் வழங்கும் நிகழ்வு வவுனியா இலுப்பையடிப் பகுதியில் அமைந்துள்ள கோவில் குளம் கமநல அபிவிருத்தி நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (எ-18)



சாவகச்சேரி மண்டுவில் இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தின் இரண்டாம் நாள் பங்குனித் திங்கள் பூஜை வழிபாடுகள், கிருபானந்தக் குருக்கள் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன. (எ-159)






சமூக சேவைகள் திணைக்களமும் கிளிநொச்சி மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்திய மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட மட்ட தடகள விளையாட்டுப் போட்டிகள், வடமாகாண விளையாட்டு கட்டடத்தொகுதி மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதேச செயலர் ரீதியாகவுள்ள மாற்றுத்திறனாளிகள் அமைப்புகளைச் சேர்ந்த வீர,வீராங்கனைகள் போட்டிகளில் பங்குபற்றினர். (ப-13)



வவுனியா நகரசபையால் ஹொரவப்பொத்தான வீதியில், மரக்கறி விற்பனைச் சந்தைக்கு முன்பாக கடந்த வாரம் திண்மக் கழிவுகள் சேகரிப்பு நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. (எ-75)




வவுனியா நகரசபையால், தங்கள் பிரதேசங்களுக்கே வருகை தந்து அனைத்துச் சேவைகளையும் வழங்கும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட நடமாடும் சேவை குடியிருப்பு வட்டாரத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. நகரசபைச் செயலாளர் இ.தயாபரன் தலைமையில் இடம்பெற்ற நடமாடும் சேவையில் நகரசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்துகொண்டு பொதுமக்களுக்கான சேவைகளை வழங்கியிருந்தனர். (எ-110)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேப்பாபிலவு படைமுகாம் ஒருபோதும் அகற்றப்படாது

## போராடிய மக்களைச் சந்தித்த இராணுவ அதிகாரி தெரிவிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 30

**கேப்பாபிலவு படைமுகாம் அகற்றப்படாது என்றும் அதற்குப் பதிலாக முகாமுக்கு அருகில் மக்களுக்கு வேறு காணிகளை வழங்கமுடியும் எனவும் இராணுவ உயர் அதிகாரி தெரிவித்தார் என அவரைச் சந்தித்த மக்கள் தெரிவித்தனர்.**


கேப்பாபிலவில் இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதியைச் சேர்ந்த மக்கள் கடந்த வியாழக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர். இராணுவத்தளபதி கேப்பாபிலவுக்கு வருவதால் அவரைச் சந்திப்பதற்கு அவர்கள் கோரியிருந்தனர். இராணுவத்தளபதி அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற பின்னரே மக்கள் சந்திப்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். வன்னிப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான அதிகாரி என்று தன்னை அறிமுகப்படுத்தியவரே தங்களுடன் பேச்சு நடத்தினார் என மக்கள் தெரிவித்தனர்.

கேப்பாபிலவு படைமுகாம் அமைப்பதற்கு அரசாங்கம் பெருந்தொகை நிதியை செலவிட்டுள்ளதாகவும், எனவே முகாம் ஒருபோதும் அகற்றப்படாது என அவர் குறிப்பிட்டார். காணிகளை இழந்த மக்களுக்கு அதேயளவு காணிகளை முகாமுக்கு அருகில் வழங்கி வீடுகளை நிர்மாணித்து தருவதாகவும் அந்த அதிகாரி எம்மிடம் தெரிவித்தார். நாம் இதற்கு மறுப்புத் தெரிவித்து பேச்சை முடிவுறுத்திக் கொண்டு வந்தோம் - என்றனர் மக்கள். (ஒ-19)

## கோப்பாயில் 'யுக்திய' நடவடிக்கை

இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் 'யுக்திய' நடவடிக்கை, கோப்பாய்ப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

கோப்பாய்ப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.பி. வெதகெதர, கோப்பாய்ப் பொலிஸ் நிலையப் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி எச்.எம்.ஜீ ஹேரத் ஆகியோரின் நெறிப்படுத்தலில் திருநெல்வேலி, கல்வியங்காடு சந்தைப் பகுதிகளில் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், வாகனங்களில் 'யுக்திய' விழிப்புணர்வு ஸ்ரிக்கர்களும் பொலிஸாரால் ஒட்டப்பட்டன. (எ-26)



## நடமாடும் சேவை முகாம்

சண்டிலிப்பாய், மார்ச் 30

சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில், சண்டிலிப்பாய்ப் பிரதேசசெயலகத்தில் நடமாடும் சேவை முகாம் ஒன்று கடந்த புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

நடமாடும் சேவையில் காலம் கடந்த இறப்பு, காலம் கடந்த பிறப்பு, திருமணப்பதிவு, அடையாள அட்டைக்கான விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளல், பொலிஸ் நற்சான்றுப் பத்திரம் உள்ளிட்ட சேவைகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் இயக்குநர் சட்டத்தரணி திருமதி அம்பிகா, சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் உத்தியோகத்தர்கள், சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-27)

## மாணவருக்கு கற்றல் ஊக்குவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ். மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் சமூக அபிவிருத்தி நிதியத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் சுமார் 2 ஆயிரத்து 600 வரையான பாடசாலை மாணவர்களுக்கு அவை கையளிக்கப்படவுள்ளன. இதற்கென சுமார் 22 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா செலவிடப்படவுள்ளது என்றும் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது. (ச-17)

## நட்டாங்கண்டலில் வீதி சீரமைப்பு

முல்லைத்தீவு, மார்ச் 30

மாந்தை கிழக்கு, நட்டாங்கண்டல் கிராமத்தின் உள்ளக வீதி ஒன்று மாந்தை கிழக்கு பிரதேச சபையால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

உள்ளக வீதிகள் சேதமடைந்துள்ளதால் வயல்களில் இருந்து நெல் மூடைகளைக் கொண்டு வருவதில் விவசாயிகள் நெருக்கடிகளை எதிர்கொண்டு வந்தனர். உள்ளக வீதிகளைச் சீரமைக்கவேண்டும் என்று கோரிக்கைமுன்வைக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில், கடந்த 14 ஆண்டுகளாக திருத்தப்படாதிருந்த வன்னிவிளாங்குளத்தில் இருந்து பாண்டியன்குளம் வரையான வீதி தற்போது திருத்தப்பட்டு வருகின்றது. 7.5 மில்லியன் ரூபா அபிவிருத்தி நன்கொடை நிதியைக் கொண்டு இந்த வீதி சீரமைக்கப்பட்டு வருகின்றது. (எ-13)

## 'இரசனை வேலைத்திட்டம்'

யாழ்ப்பாணம், மார்ச் 30

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் சிறுவர்களின் மகிழ்ச்சியை மேம்படுத்துவதற்கான 'இரசனை வேலைத்திட்டம்' பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வளவாளராக தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வுபெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர் இ.கமலநாதன் மற்றும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (எ-9)

## பிள்ளையார் சிலையை உகந்த இடத்தில் நிறுவுக

### அரியாலை மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 30

அரியாலை தபாற்கட்டைச் சந்தியிலுள்ள மீன் சந்தைக்கருகே அமைந்துள்ள கோவில் காணியில் பிள்ளையார் சிலை அமைப்பது, சைவசமயத்தை இழிவுபடுத்துவதாக இருக்கும் என்பதால் அங்கு சிலையை அமைக்கவேண்டாம் என அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரியாலை ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தால், அரியாலை தபாற்கட்டைச்சந்திக்கருகிலுள்ள காணியில் பிரமாண்டமான பிள்ளையார் சிலை ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்தக் காணிக்கு அருகில் மக்கள் நடமாட்டம் அதிகமாகவுள்ள மீன் சந்தையும், இறைச்சிக் கடையும் உள்ளன. அந்தப் பகுதியில் பிள்ளையார் சிலையை அமைப்பது சைவ சமயத்தவர்களை இழிவுபடுத்துவதாக அமையும். ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான வாசலில் அமைக்கப்பட்ட 'வளைவின் கீழ்' அல்லது அதற்கருகாமையில் சட்டதிட்டத்துக்கேற்ப சிலையமைத்து, அதனைச் சுற்றியுள்ள சூழலில் பூந்தோட்டங்கள் அமைத்தல் மற்றும் சைவ சமயத்தவர்களைக் குடியமர்த்தல் போன்றவற்றை மேற்கொள்வது சிறப்பான செயல் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப)

## கால்நடைகளை மேய்ச்சலுக்கு ஈடுபடுத்துவதில் நெருக்கடி!

### கால்நடை வளர்ப்பாளர்கள் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, மார்ச் 30

கனகாம்பிகைக் குளத்துக்கும், கிளிநொச்சி நகரத்துக்கும் இடையே அத்துமீறிய குடியேற்றங்களும், வயல் நிலங்களும் உருவாக்கப்பட்டுள்ளதால் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்த முடியாதுள்ளது என்று கால்நடை வளர்ப்பாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கனகாம்பிகைக் குளத்திலிருந்து கிளிநொச்சி குளத்தைச் சென்றடையும் ஆற்றின் இரு புறமும் வயல் நிலங்கள் மற்றும் குடியிருப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. பொன்நகரில் உள்ள மேய்ச்சல் தரவைகள் வனவளத் திணைக்களத்தின் பிடியில் உள்ளன.

இந்தநிலைமையால் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதில் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இது தொடர்பாக அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கால்நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-13)

## பொதுச்சந்தையை இயக்குமாறு முக்கொம்பன் மக்கள் கோரிக்கை

பூநகரி, முக்கொம்பனில் உள்ள பொதுச் சந்தையை இயக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முக்கொம்பனில் 700க்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்கின்றன. அங்கு பொதுச்சந்தை அமைக்கப்பட்டுள்ளபோதும், அது இயங்காத நிலையிலேயே உள்ளது.

இந்தச் சந்தையை இயக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். சந்தை இயக்கப்படாததால் முக்கொம்பன், அரசபுரம், நேரடம்பன், சின்னப்பல்லவராயன்கட்டு, கண்ணகைபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களின் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்த வாய்ப்புக் கிடைக்கும். சந்தையை இயக்குவதற்குப் பிரதேச சபையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-13)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெங்களூரை இலகுவாக பந்தாடியது கொல்கத்தா!

பெங்களூர், மார்ச் 30

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸை மிகமிக இலகுவாகத் தோற்கடித்தது கொல்கத்தா நைற் ரைடர்ஸ்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா அணி




முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. பெங்களூர் அணியின் ஆரம்ப வீரர்களாக கோலி மற்றும் டுபிளஸி இருவரும் களமிறங்கினார்கள். 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார் டுபிளஸி. ஆனால், கோலி மற்றும் கிறீன் இருவரும் இணைந்து பெங்களூர் அணிக்கு நல்லதொரு இணைப்பாட்டத்தை வழங்கினார்கள். அணி 82 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 33 ஓட்டங்களுடன் கிறீன் ஆட்டமிழந்தார். மக்ஸ்வெல் 28 ஓட்டங்களைப் பெற்றபோதிலும், அவரால் நேற்றும் பெரியதொரு இன்னிங்ஸைக் கட்டமைக்க முடியவில்லை. படிதார், ராவட் இருவரும் தலா 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். டினேஸ் கார்த்திக் நேற்றும் அதிரடியாக விளையாடி 8 பந்துகளில் 20 ஓட்டங்களைக் குவித்தார். மறுமுனையில் கோலி 59 பந்துகளில் 83 ஓட்டங்களைப் பெற்றிருந்தாலும் அவரது ஆட்டம் பெங்களூரைக் கரைசேர்த்ததா? என்றால் இல்லை என்பதுதான் பதிலாக அமையும். ஆடுகளம் ஈரலிப்பானதாக மாறிக் கொண்டிருக்கையில் ஆரம்பம் முதல் களத்தில் நின்றவர் என்ற அடிப்படையில் கோலி இன்னும் 20 ஓட்டங்களையேனும் அதிகமாகப் பெற்றிருக்கவேண்டும் என்பதே பொதுவான கணிப்பாக உள்ளது. முடிவில் 6 விக்கெட்களை இழந்து 182 ஓட்டங்களை பெங்களூர் அணி பெற்றது.

பந்துவீச்சில் ரணா, ரசல் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய கொல்கத்தா அணி, அதிரடி வீரர் சுனில் நரைனை ஆரம்ப வீரராக அனுப்பியது. பவர் பிளேக்குள் முடிந்தளவு ஓட்டங்களைக் குவித்து பெங்களூருக்கு பதற்றத்தை ஏற்றுவதே திட்டமாக இருந்தது. திட்டத்தை நரைனும் நன்றாகவே செயற்படுத்தினார். பவுண்டரிகளும் சிக்சர்களும் நரைனின் துடுப்பில் இருந்து பாய்ந்தன. மற்றொரு ஆரம்ப வீரரான பில் ஷோல்டும் அடித்தாடிக் கொண்டிருந்தார். 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அதாவது பவர்பிளே முடிந்தபோது 85 ஓட்டங்களை இலக்குச் சரிவில்லாமல் குவித்திருந்தது கொல்கத்தா. எப்பவோ முடிந்த காரியம் என்பதுபோல் கொல்கத்தாவின் வெற்றி மிகத் துரிதமாகவே உறுதிப்படுத்தப்பட்டது. 22 பந்துகளில் 47 ஓட்டங்களைக் குவித்து நரைனும், 20 பந்துகளில் 30 ஓட்டங்களைக் குவித்து பில் ஷோல்ட்டும் ஆட்டமிழந்தனர். எனினும் தொடர்ந்து வந்த வெங்கடேஸ் ஐயர் மற்றும் ஸ்ரேயஸ் ஐயர் ஆகியோர் கொல்கத்தாவை சிறிய சிரமமுமின்றி வெற்றியை நோக்கி அழைத்துச் சென்றனர். 50 ஓட்டங்களுடன் வெங்கடேஸ் ஆட்டமிழந்தாலும், தொடர்ந்தும் நிலைத்துநின்று ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் ஸ்ரேயஸ். (ம)

---

## வற்றியது...

உணவுப்பணவீக்கம் மார்ச்சில் 3.8 சதவீதமாக அதிகரித்தது.

மேலும், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த மாற்றம் மார்ச்சில் 1.94 சதவீதமாகப் பதிவாகியுள்ளது.

இதற்கு உணவுப்பொருள்களின் விலைகளில் அவதானிக்கப்பட்ட 0.66 சதவீத வீழ்ச்சியும், உணவல்லாப் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள், கட்டணங்களில் அவதானிக்கப்பட்ட 1.28 சதவீத வீழ்ச்சியும் காரணமாக அமைந்துள்ளன. (அ-ம)

## நாடாளுமன்றைக்...

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற வேட்பாளரின் கட்சிக்கு அது கூடுதல் சாதகத்தை வழங்கும் என்பதால் முதலில் பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதே பெரமுனவின் நிலைப்பாடாக உள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதி ரணிலிடம் பல தடவைகள் பெரமுனவினர் வலியுறுத்திய போதிலும், முதலில் பொதுத் தேர்தல் என்ற நிலைப்பாட்டுக்கு ரணில் வரவில்லை. அரசமைப்பின் பிரகாரம் செப்ரெம்பர் இறுதியில் அல்லது ஒக்ரோபர் முதல்வாரத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கே ஜனாதிபதி உத்தேசித்துள்ளார்.

இதையடுத்தே, நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, நாடாளுமன்றத் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தும் பிரேரணையொன்றை ஏப்ரல் மாதம் இரண்டாவது வாரத்தில் பெரமுன கொண்டுவரவுள்ளதாகத் தெரியவருகின்றது.

பிரேரணையை வெற்றிபெறச் செய்ய 113 வாக்குகள் தேவை. அண்மையில் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது அரச தரப்பினருக்கு 117 வாக்குகள் கிடைத்தன. அவ்வாறு வாக்களித்தவர்களில் பலர் ஜனாதிபதிரணிலின் ஆதரவாளர்கள். பெரமுனவில் சிலர் ரணில் பக்கம் நிற்கின்றனர். நிமல் லான்சா, அநுரயாப்பா உள்ளிட்ட குழுவினரும் ரணிலின் பக்கம் நிற்கின்றனர். சுதந்திரக்கட்சியினரும் ஜனாதிபதியின் பக்கமே உள்ளனர். எனவே 113 என்ற இலக்கை அடைவதற்கு சாத்தியங்கள் குறைவு என்பதால், இது தொடர்பாகத் திரைமறைவுப் பேச்சுகளிலும் தற்போது பஸில் ஈடுபட்டு வருகின்றார் என்றும் அறியமுடிகின்றது. (அ-ம-44)

## இலங்கைக்குத்...

இலங்கை திரும்புவதில் தொடர்ந்தும் இழுபறி காணப்படுவதாக முருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சட்டத்தரணி புகழேந்தி பாண்டியன் ஊடாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்தியாவில் இருந்து வெளியேறுவதற்கான அனுமதி இந்திய ஒன்றிய அரசிடம் இருந்து கிடைத்தால் மூன்று வேலை நாள்களில் இலங்கை திரும்புவதற்கான ஏற்பாடுகளைப் பூர்த்திசெய்யமுடியும் என இலங்கைத் துணைத்தூதரகத்தின் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆவணங்கள் கிடைக்கப்பெற்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை உரிய இடத்தில் கையளிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு நாடுகடத்தும் உத்தரவாக இல்லாது வழக்கமான பயண நடைமுறைகளின் பிரகாரம் நாட்டைவிட்டு வெளியேறும் சாதாரண உத்தரவே வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து பயணச்சீட்டைப் பெறுவதற்காக [illegible] றபோது உறுதி [illegible] வழங்காது திருப்பி அனுப்பியுள்ளனர். விமானசேவை அனுமதிக்காகக் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ஒரு வாரம் கடந்துவிட்ட நிலையில் அடுத்த வாரத்திலாவது நாடு திரும்ப முடியுமா என்பது சந்தேகமாக உள்ளது - என்றுள்ளார். (ம-100)

## எந்தவொரு...

செப்ரெம்பர், ஒக்ரோபர் காலப்பகுதிக்குள் நடத்தவேண்டும். அதன் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும். என்றாலும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்துமாறு பொதுஜன பெரமுன உள்ளிட்ட மேலும் சில கட்சிகள் கோரிவருகின்றன. ஆனால் நாட்டின் தற்போதைய நிலையில் பொதுத் தேர்தல் இடம்பெற்றால் எந்தவொரு கட்சிக்கும் தனித்து ஆட்சி அமைப்பதற்கு போதுமான பெரும்பான்மை கிடைக்கப்போவதில்லை.

அவ்வாறான நிலை ஏற்பட்டால் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஜனாதிபதி முன்னெடுத்துவரும் அனைத்து வேலைத்திட்டங்களும் தடைப்படும். நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளும் மீண்டும் பின்தள்ளப்படும். அதனால் முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. ரணில் விக்கிரமசிங்க நிச்சயமாக அதில் வெற்றிபெறுவார். அதன் பின்னர் பொதுத்தேர்தல் ஒன்றுக்குச் சென்றால் நிலையான ஆட்சியை ஏற்படுத்தலாம் - என்றார். (அ-ம)

## குடும்பத்...

மீட்கப்பட்டுள்ளார். உடற்கூற்றுப் பரிசோதனையின்போது, அதீத மதுப்பாவனை காரணமாக அவர் உயிரிழந்திருக்கலாம் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது. மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-27)

## ஞானசார...

அவர் சிறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்குச் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன், கொழும்பு மேல்நீதிமன்றம் வழங்கிய தண்டனைக்கு எதிராக கலகொட அத்தே ஞானசாரதேரர் மேன்முறையீடு செய்துள்ளார் என்றும் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம)

## அரசாங்கம்...

நிலையிலேயே, இந்த அறிவித்தல் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது. விஸா வழங்கும் நடவடிக்கைகளை இலகுவாக்கும் பொருட்டு விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறை மட்டுமே தனியார் நிறுவனத்திடம் கையளிக்கப்படவுள்ளதாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-ம-6)

## வீதிப்...

பலகைகள் அமைத்தல், ஓட்டுநர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற பல வேலைத்திட்டங்களை மேற்கொள்ளத்தீர்மானிக்கப்பட்டுள்ளது. விபத்துகளைக் குறைத்து, சீரான போக்குவரத்தையும் வீதி ஒழுக்கத்தையும் பேணும் வடமாகாணத்தை உருவாக்குவதே பொலிஸாரின் நோக்கமாகும் - என்றார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விவசாய அமைச்சர் வந்தமை தெரியப்படுத்தப்படவில்லை!

## இரணைமடு விவசாய சம்மேளனம் குற்றச்சாட்டு

**கிளிநொச்சி, மார்ச் 30**

**விவசாய அமைச்சர் கிளிநொச்சிக்கு வந்து சென்றமை தொடர்பில் எமக்குத் தெரியாது. நிகழ்வுக்கு முதல்நாளே அது தொடர்பில் அறிவிக்கப்பட்டிருந்தது. உரியநேரத்தில் அறிவிக்கப்பட்டிருந்தால் எமது பிரச்சினைகளை முன்வைத்திருப்போம் -இவ்வாறு இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் முத்து சிவமோகன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் மாவட்டச்செயலக மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. வெள்ளத்தால் ஏற்பட்ட பயிரழிவு தொடர்பில் அதில் கலந்துரையாடப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்திலேயே சம்மேளனத்தின் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுற்றறிக்கையின்படி பயிர்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. முதல் மாதம், பூப்பதற்கு முன்பதான காலம், பூத்த பின்னர் அறுவடை செய்யும் வரையான காலமாக மூன்றாகப் பிரிக்கப்படுகிறது. வெள்ளம் ஏற்பட்ட காலம் பூத்த பின்னரான காலம் என்பதால் அது மூன்றாவது நிலையில் உள்ளதாகக் கருதப்படவேண்டும். ஆயினும் பூப்பதற்கு முன்பதான 2ஆம் நிலையில் பயிரழிவு மதிப்பீடு செய்யப்பட்டு, நட்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் நாங்கள் அதற்கு உடன்படவில்லை. இந்த விடயத்தை ஜனாதிபதிக்கு கடிதம்மூலம் எழுதியதுடன், அதன்பிரதியை அமைச்சர் உள்ளிட்ட பலருக்கும் அனுப்பியுள்ளேன். விவசாய அமைச்சர் கிளிநொச்சி வந்து சென்றமை எமக்கு உரிய நேரத்தில் தெரிவிக்கப்படவில்லை. அந்த நேரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தால் இந்தப் பிரச்சினையை அவரிடம் முன்வைத்திருப்பேன் - என்றார். (எ-113)

## அம்பாந்தோட்டையில் அரசியல் போராட்டம்

### ஆரம்பிக்கிறது பெரமுன

அம்பாந்தோட்டையில் இருந்து தனது அரசியல் போராட்டத்தை இன்றையதினம் பெரமுன ஆரம்பிக்கவுள்ளது.

பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளராக நாமல் ராஜபக்ச நியமிக்கப்பட்ட பின்னர் அந்தக் கட்சியின் முதலாவது மக்கள் கூட்டம் ராஜபக்சக்களின் அரசியல் கோட்டையென கூறப்படும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 'அம்பாந்தோட்டையில் இருந்து சமரை ஆரம்பிப்போம்' எனும் தொனிப்பொருளின்கீழ் இடம்பெறுகின்றது. (அ-ம-44)

## ஆசிரியர்கள் பற்றாக்குறை மாணவர்கள் நெருக்கடியில்

கிளிநொச்சி, மார்ச் 30

அக்கராயன் மகா வித்தியாலயத்தில் உயர்தரத்தில் கணித, விஞ்ஞானப் பிரிவுகளுக்கான ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதால் மாணவர்கள் கல்வி பாதிக்கப்பட்டுள்ளன.

கணித, விஞ்ஞானப் பிரிவுகள் இயங்கத் தொடங்கிய குறுகிய காலத்துக்குள்ளேயே மருத்துவத்துறை, பொறியியல்துறை என்பவற்றுக்கு மாணவர்கள் மாவட்ட மட்டத்தில் முதல்நிலை பெற்று வந்துள்ளனர். குறித்த பாடசாலையில் ஆசிரிய விடுதிகள், குடிதண்ணீர் மற்றும் மின்சாரம் உள்ளிட்ட சகல அடிப்படை வசதிகளும் காணப்படுகின்ற நிலையில், கணித, விஞ்ஞானப் பிரிவுகளுக்கு உடனடியாக ஆசிரியர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிமனை மேற்கொள்ள வேண்டுமென பாடசாலைச் சமூகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-13)

## எரியூட்டி திறந்து வைப்பு

கோம்பயன் மணல் இந்து மயானத்தில் அமைக்கப்பட்டுள்ள யாழ். போதனா மருத்துவமனைக்கான புதிய எரியூட்டியின் செயற்பாடுகள் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.




யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக்கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு புதிய எரியூட்டியின் செயற்பாடுகளைச் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்து, குறித்த எரியூட்டி அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-66)

**விற்பனைக்கு**

Singer Safari
மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
(40.000 Km ஓடிய தனிநபர் பாவனையிலுள்ளது)
தொடர்பு: 077 790 0947
(CS/54547) J-1

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்திற்கு முன்பாக 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தரகர்கள் தொடர்பு கொள்ளவேண்டாம்.
தொடர்பு: 076 206 1703

**சாவகச்சேரியில் காணி விற்பனைக்குண்டு**


சாவகச்சேரி நகர் கண்டி வீதியில் 190, ஏற்றத்தடியில் 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு
தொர்புகளுக்கு:
076 615 6958, 076 430 1811
(CR 421158) V-1

**கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு**

இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) இப்பொழுது எம்மிடம்.
குறிப்பு: இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.
"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"
ஆர்க். என். கம்பனி
• 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
• A9 வீதி, எழுதுமட்டுவாழ், 070 191 3571
• A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020
Hotline: 071 535 7799 / 071 973 9917

**பண வசூலிப்பாளர்**
**(COLLECTION OFFICER)**

மேற்குறிப்பிட்ட பதவிக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்க லாம்.
ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் (30.03.2024) சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் ந.ப 12.00 மணிவரை தங்கள் சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகம்தரவும்.



உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### இராசரத்தினம் ரஞ்சிதமலர்



பிறப்பு 18.11.1959 இறப்பு 27.03.2024

முகமாலையைப் பிறப்பிடமாகவும் (முகாமலை வடக்கு பளை) வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் ரஞ்சிதமலர் கடந்த 27.03.2024 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.03.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் முகமாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
முகமாலை 077 071 9123
கணவர் - இராசரத்தினம் (ஐயாக்குட்டி)
(cs.54570) (N-1)

**காணி விற்பனைக்கு**

கொக்குவில் குளப்பிட்டி - ஆனைக்கோட்டை வீதியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் கேணியடி லேனில் சிறு வீட்டுடன் கூடிய 3 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நேரடியாக தொடர்பு கொள்ளவும். விலை விபரம் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: - 070 193 8372 (Whatsapp) 077 443 4501

**வீடு வாடகைக்கு**

கொக்குவில் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள வீட்டின் மேல்மாடி சகல வசதிகளுடன் கொண்ட அறைகள் வாடகைக்கு விடப்படும். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் குடும்பத்தினருக்கும் தங்குவதற்கு உகந்தது.
076 072 6058

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 463 0000 - விளம்பரம் : 021-493 1111
விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.